பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
04 10 2024 **FRIDAY** 6 45 **AM**
வணக்கம். மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் இரண்டாம் கட்ட பணிகளுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- நாட்டில் கடந்த மாதம் வரை, 13 ஆயிரத்து 822 மக்கள் மருந்தகங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- வானிலை முன்னெச்சரிக்கை குறித்த செய்திகளை தமிழ் மொழியிலேயே அறிந்து கொள்ளும் வகையிலான **TN-Alert** என்ற செயலி செயல்பாட்டிற்கு வந்துள்ளது.
- மகப்பேறு இறப்பு இல்லாத மாநிலம் என்ற நிலையை நோக்கி, தமிழகம் சென்று கொண்டிருப்பதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் கூறியுள்ளார்
- உலக கோப்பை மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில், இந்தியா இன்று நியூஸிலாந்தை எதிர்கொள்கிறது.

>>>>><<<<<

சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் இரண்டாம் கட்ட பணிகளுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

புதுதில்லியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இம்முடிவு மேற்கொள்ளப்பட்டது.

63 ஆயிரத்து 246 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்படவுள்ள இத்திட்டம், 2027ஆம் ஆண்டுக்குள் நிறைவேற்றப்படவுள்ளது.

மொத்தம் 128 ரயில் நிலையங்களுடன் 119 கிலோமீட்டர் தொலைவிற்கு இந்த இரண்டாம் கட்ட மெட்ரோ வழித்தடம் அமையவுள்ளது.

மாதவரம் முதல் சிப்காட் வரையிலும், கலங்கரைவிளக்கம் முதல் பூந்தமல்லி புறவழிச்சாலை வரையிலும், மாதவரம் முதல் சோழிங்கநல்லூர் வரையிலும் புதிய ரயில்பாதை அமைக்கப்படவுள்ளது.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ், இரண்டாம் கட்ட மெட்ரோ வழித்தடங்கள் மூலம், சென்னையின் உட்கட்டமைப்பு வளர்ச்சியில் சிறந்த ஒன்றாக அமையும் என்று குறிப்பிட்டார்.

ரயில்வே ஊழியர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கவும் அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் 11 லட்சத்து 72 ஆயிரம் ஊழியர்கள் பயனடைவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொத்தம் 2 ஆயிரத்து 29 கோடி ரூபாய் ஊக்கத்தொகைக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

தேசிய சமையல் எண்ணெய் - எண்ணெய் வித்துக்கள் இயக்கத்திற்கும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

அடுத்த 7 ஆண்டுகளில் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில், நாடு சுயசார்பை அடையும் வகையில் 10 ஆயிரத்து 103 கோடி ரூபாய் மதிப்பில் இத்திட்டத்தை செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

பிரதமரின் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்திற்கும் மத்திய அமைச்சரவையில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளின் வருவாய் அதிகரிக்கும் வகையிலும், நடுத்தர மக்களின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையிலும், ஒரு லட்சம் கோடி ரூபாய் செலவில் இத்திட்டத்தை நிறைவேற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் இரண்டாம்கட்ட பணிகளுக்கு மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் அளித்ததற்காக பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு, முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் நன்றி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், தமிழக மக்களின் நீண்டநாள் கோரிக்கை ஏற்கப்பட்டுள்ள நிலையில், சென்னை மெட்ரோ ரயிலின் இரண்டாம் கட்டத்தை கூடிய விரைவில் நிறைவேற்றுவோம் என உறுதியாக நம்புவதாக குறிப்பிட்டுள்ளார்.

>>>>><<<<<

நாட்டில் கடந்த மாதம் வரை, 13 ஆயிரத்து 822 மக்கள் மருந்தகங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மத்திய ரசாயன மற்றும் உரத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த மருந்தகங்களில் இதுவரை இல்லாத அளவாக கடந்த செப்டம்பர் மாதம், 200 கோடி ரூபாய் அளவிற்கு மருந்து விற்பனை செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

கடந்த பத்தாண்டுகளில் இந்த மருந்தகங்கள் மூலம், ஆறாயிரத்து 100 கோடி ரூபாய் அளவிற்கு மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம், 30 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு மக்களின் பணம் சேமிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>><<<<<

வானிலை மற்றும் முன்னெச்சரிக்கை செய்திகளை பொதுமக்கள் தமிழ் மொழியிலேயே அறிந்து கொள்ளும் வகையில், மாநில அரசு அறிமுகப்படுத்தியுள்ள **TN-Alert** என்ற செயலி செயல்பாட்டுக்கு வந்துள்ளது.

சென்னை எழிலகத்தில் உள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் இதனை அறிமுகம் செய்தார்.

அடுத்த நான்கு நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு, தினசரி பெய்த மழையளவு, நீர்த்தேக்கங்களின் நீர் இருப்பு விவரம், மக்களின் இருப்பிடம் வெள்ள அபாயத்திற்கு உட்பட்டதா என்பன போன்ற தகவல்களை இந்த செயலி மூலம் தெரிந்து கொள்ள முடியும்.

பேரிடர் மற்றும் கனமழையின் காரணமாக பாதிப்புக்கு உள்ளாகும் மக்கள், தங்களது புகார்களை பதிவு செய்யவும், மாவட்ட நிர்வாகத்தை தொடர்பு கொள்ளவும் இந்த செயலியில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**TN-Alert** செயலியை **Google Play Store** மற்றும் **IOS App Store-**ல் பதிவிறக்கம் செய்யலாம் என்று மாநில அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**>>>>><<<<<**

தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணையத்தின் தலைவராக சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி முனைவர் எஸ். தமிழ்வாணன் நியமிக்கப்பட்டுள்ளார்.

மூன்றாண்டு காலம் இப்பொறுப்பை அவர் வகிப்பார் என்று ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**>>>>><<<<<**

தமிழகத்தில் தேவையான அடிப்படை மருந்துகள் கையிருப்பில் உள்ளதாக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

தஞ்சாவூரில் சர்வதேச பொது சுகாதார மூன்று நாள் மாநாட்டை நேற்று தொடங்கி வைத்த பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனை தெரிவித்தார்.

மகப்பேறு இறப்பு இல்லாத மாநிலம் என்ற நிலையை நோக்கி, தமிழகம் சென்று கொண்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

(சவுண்ட் பைட் - மா.சு 32 செகண்ட்ஸ்

**>>>>><<<<<**

தருமபுரியில் புத்தக திருவிழா இன்று தொடங்குகிறது.

13ஆம் தேதிவரை நடைபெறவுள்ள இத்திருவிழாவில் பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் பங்கேற்று பயனடையுமாறு ஆட்சியர் திருமதி. சாந்தி கேட்டுக் கொண்டுள்ளார்.

(சவுண்ட் பைட் – சாந்தி 35 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

தமிழகத்தில் நீலகிரி முதல் திண்டுக்கல் வரையிலான மேற்குத்தொடர்ச்சி மலை மாவட்டங்களில் இன்று முதல் இரண்டு நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், திருவண்ணாமலை உள்ளிட்ட வட உள்மாவட்டங்களிலும் கனமழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

>>>>><<<<<

இருவரிச் செய்திகள்

இலங்கையில் பொதுத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்குகிறது.

>>>>><<<<<

நேபாளத்தில் ஏற்பட்ட நிலச்சரிவு மற்றும் வெள்ளப்பெருக்கில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 236ஆக அதிகரித்துள்ளது.

>>>>><<<<<

மாணவர்கள் தங்களது வாழ்க்கையில் நேர்மையை கடைபிடிக்க வேண்டும் என்று குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

>>>>><<<<<

ஒடிசாவின் வனப்பரப்புகளில் 696 சிறுத்தைகள் இருப்பதாக கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளதாக அம்மாநில அரசு கூறியுள்ளது.

>>>>><<<<<

தமிழகத்தில் தீபாவளி பண்டிகையை ஒட்டி, பட்டாசு கடைகள் வைக்க விரும்புவோர் இம்மாதம் 19ஆம் தேதிக்குள் இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்குமாறு மாநில அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

>>>>><<<<<

தடை செய்யப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை குறித்து தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்கு தெரிவிக்குமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

>>>>><<<<<

தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பாரம்பரிய உணவுத் திருவிழா நடைபெற்றது.

>>>>><<<<<

நாமக்கல் மாவட்டத்தில் நாளை முதல் 2 நாட்கள் நடைபெறவுள்ள வனஉயிரின வாரவிழா போட்டிகளில் பங்கேற்குமாறு ஆட்சியர் திருமதி. உமா கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>><<<<<

ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம், மாவட்ட அளவிலான ஊட்டச்சத்து திருவிழா நேற்று நடைபெற்றது.

>>>>><<<<<

திருவள்ளூர் மாவட்டத்தில் பட்டாசு கடைகள் அமைக்கக் கோரும் விண்ணப்பங்களை முறையாக ஆய்வு செய்து அனுமதி வழங்க வேண்டும் என்று அலுவலர்களுக்கு ஆட்சியர் திரு. பிரபுசங்கர் அறிவுறுத்தியுள்ளார்.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

உலக கோப்பை மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில், இந்தியா இன்று நியூஸிலாந்தை எதிர்கொள்கிறது.

துபாயில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

முன்னதாக நடைபெறவுள்ள மற்றொரு போட்டியில், தென்னாப்பிரிக்கா – வெஸ்ட் இண்டீஸ் அணியை எதிர்கொள்கிறது.

நேற்று நடைபெற்ற ஆட்டங்களில் பங்களாதேஷ் 16 ரன் வித்தியாசத்தில் ஸ்காட்லாந்தையும், பாகிஸ்தான் 31 ரன் வித்தியாசத்தில் இலங்கையையும் வென்றன.

>>>>><<<<<

ஆசிய **Rugby** சாம்பியன்ஷிப் போட்டி காத்மண்டில் இன்று தொடங்குகிறது.

ஆடவர் பிரிவில் இந்தியா – பங்களாதேஷையும், மகளிர் பிரிவில் இந்தியா - இலங்கையையும் எதிர்கொள்கிறது

>>>>><<<<<

லண்டனில் நடைபெற்று வரும் க்ளோபல் செஸ் லீக் போட்டியில், இந்திய வீரர்கள் அர்ஜூன் எரிகேஸி – பிரக்ஞானந்தா இடையேயான ஆட்டம் டிராவில் முடிவடைந்தது.

>>>>><<<<<

ஐஎஸ்எல் கால்பந்து போட்டியில் ஒடிசா – கேரள அணிகளுக்கு இடையேயான ஆட்டம் டிராவில் முடிவடைந்தது.

இரு அணிகளும் தலா 2 கோல் போட்டன.

**>>>>><<<<<**